**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (செயற்திட்டம் -1) - 2017**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (செயற்திட்டம் -1) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை மின்சார சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 20 ஆம் திகதிய எஸ்ஆர்ஜ 47037 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

நிகழ்ச்சித்திட்டத்தின் வசதி நிர்வாக கைநூலின் பிரகாரம், வலு மற்றும் மீள்சுழற்சி சக்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. தூய வலு உற்பத்தி, முறைமை வினைத்திறன் மற்றும் உண்மைத்தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் பங்கொன்றாக மீள்சுழற்சி சக்தி உற்பத்தியை அதிகரித்தல், பரிமாற்றக் கட்டமைப்பை உயர்த்துதல், வலையமைப்பு வினைத்திறனை முன்னேற்றுதல் மற்றும் கேள்விப் பக்க முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தல் என்பவற்றை நிகழ்ச்சித்திட்டம் இலக்கிடுகின்றது. நிகழ்ச்சித்திட்டத்தின் வசதி நிர்வாக கைநூலின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 28,509.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 220 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 23,326.20 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 180 மில்லியன் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்டம் -I இன் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணங்கப்பட்டிருந்தது. நிதியளிப்பு மற்றும் நிதியளிப்பு மூலங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **மூலம்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
|---|---|---|
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | | |
| சாதாரண மூலதன வளங்கள் (ஓசீஆர்) கடன் | 121.00 | 15,680.39 |
| ஆசிய அபிவிருத்தி நிதிய கடன் | 29.00 | 3,758.11 |
| பிரான்சிஸ் அபிவிருத்தி முகவர் கடன் | 30.00 | 3,887.70 |
| இலங்கை அரசாங்கம் | 40.00 | 5,183.60 |
| | --------- | ------------ |
| **மொத்தம்** | **220.00** | **28,509.80** |
| | ===== | ======= |

நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2015 பெப்ரவரி 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் செயற்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கபட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்பிகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

இதுவரையிலான எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து ஏற்படுகின்ற செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) செயற்திட்டத்தின் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்பிகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

(உ) செயற்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 31 அளவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்படுகின்றதுடன் 2018 யூன் 05 இல் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முன்மொழியப்பட்ட மொனராகல நீர் மின்வலு செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணங்களுக்கான காணிகளின் கொள்வனவுக்கு மத்திய மாகாணத்திலுள்ள உடபலத மற்றும் கங்கா எஹலகொரல பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 7.20 மில்லியன் தொகையான வைப்புக்களில், ரூபா 3.50 மில்லியன் தொகையொன்று மீளாய்வாண்டின் போது காணி உரிமையாளர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றிற்கு எவ்வித கணக்கீட்டு உபசரிப்புக்களுக்கும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அதன் விளைவொன்றாக, வைப்புக் கணக்கில் காட்டப்பட்ட மீதி மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்த அதேவேளை நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையின் மீதி அதே தொகையினால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 180.00 | 23,326.20 | 4,998.00 | 13.41 | 2,051.00 | 18.90 | 2,891.00 |
| ஜீஓஎஸ்எல் | 40.00 | 5,183.60 | - | - | - | - | - |
| சீஈபி | - | - | 417.00 | 3.16 | 483.00 | 6.45 | 987.20 |
| **மொத்தம்** | **220.00** | **28,509.80** | **5,415.00** | **16.57** | **2,534.00** | **25.35** | **3,878.20** |

நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 03 வருடங்கள் கடந்திருந்தபோதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, ரூபா 23,326.20 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 180 மில்லியன் ஒதுக்கீடுகளில் 12 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,891 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 18.90

மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையினால், செயற்திட்டத்தின் மிகுதியாகவுள்ள 03 வருடங்களின் போது கடன் ஒதுக்கீடுகளின் முழுமையான ஒதுக்கீடுகளினை பயன்படுத்துவதற்குரிய சாத்தியக்கூறு ஐயத்திற்குரியதாக தொடர்ந்தும் காணப்படுகின்றது.

## 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 04 முக்கியமான பகுதிகளினை உள்ளடக்கியிருந்ததுடன், மீளாய்வாண்டின்போது அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் பௌதீக செயல்முன்னேற்றம் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

(அ) நீர் மின்சார பொறியின் உற்பத்தி இயலளவை உயர்த்துவதற்கான மொறகொலவிலுள்ள நீர் மின்சார பொறியின் நிர்மாணத்திற்கான விலைமனு ஆவணங்களை மீளாய்வு செய்வதற்குரிய ஆலோசனை ஒப்பந்தம் 2016 ஒக்தோபர் 24 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் ஆலோசனையாளர் 2016 திசெம்பர் 01 இலேயே வேலையை ஆரம்பித்திருந்தார். கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், நீர்த்தேக்க அணைக்கட்டின் மீள்வடிவமைப்பு வேலைகள் மற்றும் விலைமனு ஆவணங்களின் மீளாய்வு வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், மொறகொலவில் நீர் மின்சார பொறியின் நிர்மாணத்திற்கான காணி கொள்வனவு செயற்பாடுகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. அங்கீகாரம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு நோக்கங்களுக்கு இலங்கை மகாவலி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களின் பிரகாரம் நீர்த்தேக்க அணைக்கட்டினை மீள்வடிவமைப்புச் செய்வதற்கு காலம் எடுத்ததன் காரணமாக, சிவில் நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரொருவரின் பெறுகை செயன்முறைகள் மற்றும் இயந்திரவியல் மற்றும் மின்னியல் வசதிகளின் வழங்குகளை 2017 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்ப கட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டது.

(ஆ) மின்சார பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலளவை உயர்த்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய கப்பாத்துறையிலுள்ள மின்சார விநியோக உபநிலையத்தின் நிர்மாண வேலைகள், மற்றும் கேறவலபிற்றிய, கட்டுநாயக்க மற்றும் திருகோணமலையிலுள்ள கிறிட் உபநிலையங்களின் பெரிதாக்கும் வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 2017 திசெம்பர் 31 வரையிலும் 42 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும், கேஸ்வெவ மற்றும் களுத்துறையிலுள்ள மின்சார விநியோக உபநிலையத்தின் நிர்மாண வேலைகள் மற்றும் அனுராதபுரத்திலுள்ள பழைய மின்சார விநியோக உபநிலையங்களினை பெரிதாக்கும் வேலைகளின் பௌதீக செயல்முன்னேற்றம், 30 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்பட்ட அதேவேளை, ஒப்பந்ததாரர்களினை தெரிவுசெய்வதிலுள்ள தாமதங்கள் காரணமாக, இணை பரிமாற்று வரிசைகளின் நிர்மாண வேலைகளின் பௌதீக செயலாற்றல், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 34 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது.

(இ) நடுத்தர வோல்ரேஸ் இன் வினைத்திறனை முன்னேற்றுவதற்கு 92 கிலோமீற்றர்களின் 33 கிலோவாற் நடுத்தர வோல்ரேஜ் இணைப்புக்களின் தாபித்தலின் கீழான வேலைகள் மற்றும் வவனாத்வே மற்றும் மாதம்பேயில் கான்ரியைஸ் இன் நிர்மாணங்களின் பௌதீக செயலாற்றல், இலங்கை மின்சார சபையினால் பூர்வாங்க இணைப்பின் அனுமதி மற்றும் சுயவிபரத்தை வடிவமைப்பது தொடர்பான வேலைகளிலுள்ள தாமதங்கள் காரணமாக, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 60 சதவீதமொன்றில் தொடர்ந்தும் காணப்பட்டது.

(ஈ) சக்தி வினைத்திறனிற்கான கேள்வி பக்க முகாமைத்துவ முன்னேற்றத்தின் கீழ் அமுல்படுத்தப்படவேண்டிய வெப்ப சேகரிப்பு பரீட்சார்த்த செயற்திட்டம் மற்றும் ஸ்மாட்

(smart) கட்டிட பரீட்சார்த்த செயற்திட்டம் என்பன முறையான காரணங்களின்றி அதனைத்தொடர்ந்து இரத்துச்செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், மின்வலு துறை அபிவிருத்தி, முறைமை மற்றும் அனுப்புதல்கள் மற்றும் சக்தி வினைத்திறன் முன்னேற்றத்திற்கான நிறுவனரீதியான இயலளவுக்கு ஆலோசனை சேவையின் ஏற்பாடுகளின் கீழுள்ள செயற்பாடுகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாதம்பே, வவுணதீவு மற்றும் ஊரணியில் 03 வீடுகளினை வாடகைக்கு அமர்த்துவதற்கு சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் காணப்படும் சந்தை விகிதத்தினை விட அதிகமாக வீடொன்றிற்கு மாதமொன்றுக்கு ரூபா 400,000 அதிகபடியான விகிதமொன்றில் ஒப்பந்தக்காரர்களுக்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 17.07 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகளினை வழங்குவதற்கு ஒப்பந்தக்காரரினூடாக கொள்வனவுசெய்யப்பட்ட 05 மோட்டார் வாகனங்களுக்கான மாதாந்த ஓட்ட அட்டவணை நிகழ்ச்சித்திட்டத்தினால் பேணப்பட்டிருக்காததுடன் அதற்குப்பதிலாக தள (site) பொறியியலாளர்களினால் சான்றுறுதிப்படுத்தப்பட்ட பயண தாள்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அதன்விளைவொன்றாக, ஒப்பந்தக்காரர்க்கு செலுத்தப்பட்ட ரூபா 13.53 மில்லியன் எரிபொருள் மற்றும் பராமரிப்புக் கிரயம் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**3.4 நிதிசார் கட்டுப்பாடுகள் தொடர்பான பிரச்சினைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 134(3) ஆம் நிதிப் பிரமாணம் மற்றும் வசதி நிர்வாகக் கையேட்டின் 26 மற்றும் 27 ஆம் பிரிவுகளினால் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை மின்சார சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 05 பகுதிகளை கொண்டிருந்ததுடன் அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தின் பகுதிகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் இலங்கை மின்சார சபையில் கையாளப்படுகின்ற அனைத்து நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் மேற்பார்வைக்காக பொறுப்பாகவுள்ள மேலதிக பொது முகாமையாளரிற்குப் பதிலாக இலங்கை மின்சார சபையின் வேறுபட்ட பிரிவுத் தலைவர்களின் அதிகாரத்தின் கீழ் தொடர்ந்தும் காணப்பட்டது.

(இ) செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09(அ) பிரிவின் பிரகாரம் நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்கான பேரேட்டுக் கணக்குகள் மற்றும் ஏனைய நிதிசார் பதிவுகளினை தனித்தனியாக பேணுவதற்கு அமுல்படுத்தல் முகவர் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் ஞாபனக் குறிப்பு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளினை பூர்த்தியாக்குவதிலுள்ள தாமதம் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனளிக்கும் முகவரினால் ரூபா 27.21 மில்லியன் தொகையான தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது.